1981 ஏப்ரல் 24]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டங்களை மேற்கொள்ளுகிற பணிகளை வாரியம் மேற்கொண்டாலும், பராமரிப்பு பொறுப்பினையாவது ஊராட்சி ஒன்றியங்களிடம் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் தான் பராமரித்து வருகின்றன. ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய ஊரக குடிதண்ணீர் வசதி திட்டத்தில் செய்யக் கூடியவைகளைத்தான் இந்த வடிகால் வாரியம் எடுத்துக் கொண்டிருக்கிறது. என்ன இருந்தாலும் எல்லாப் பிரச்னைகளுக்கும் ஒரு மறு பரிசீலனை தேவை என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் பலருடைய பொதுவான கருத்தாக இருப்பதினால், தேர்தல் முடிந்த பிறகு, நாம் அந்த வேலைகளில் ஈடுபட்டு, எல்லோரும் ஆர அமர உட்கார்ந்து, அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

இடையன்குளம் பஞ்சாயத்துப் பகுதியிலுள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலை.

*வினா எண் 862—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி இடையன்குளம் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரால் சாகுபடி நிலங்கள் பாதிக்கப்படுகின்றனவா -

(ஆ) ஆம் எனில், மேற்படி கழிவு நீரை அப்புறப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மேற்படி தொழிற்சாலை கழிவு நீரால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன என்பதை நான் நேரடியாகப் பார்த்திருக்கின்றேன். இது என் தொகுதியில் வருகிறது. அதிகாரிகள் தவறான குறிப்புகளை அமைச்சர் அவர்களுக்கு தந்திருக்கின்றார்கள். ஆகவே, தவறான குறிப்புக்களை கொடுத்துள்ள அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அந்த நிலங்களில் விவசாயம் நடக்காததால், உணவு தானியங்கள் சரியான முறையில் விளைவிக்கமுடியாததால், உணவுப் பற்றாக்குறை அந்தப் பகுதியில் அதிகமாக ஆகியிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அந்தத் தொழிற்சாலை அதிபர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இராமநாதபுரம் மாவட்டம் இடையான்குளம் பஞ்சாயத்து எல்லையில் உள்ள ஸ்ரீராம் வச்சரத் தொழிற்சாலையை திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரும் மற்றும் சுகாதார ஆய்வாளரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு இத்தொழிற்சாலைக்கு அடுத்துள்ள மற்றும் அருகாமையிலுள்ள விளைச்சல் நிலங்களில் சாகுபடி எதுவும் பாதிக்கப்படவில்லையென்றும் மேலும் அந்த நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், கரும்பு பயிர்கள் ஏனைய இடங்களிலுள்ள நிலங்களில் விளையும் பயிர்களைப்போல் நன்றாக உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியுள்ளார்கள். தொழிற்சாலையை ஒட்டி மேற்கேயுள்ள இரு நிலங்களின் சாகுபாளர்களும் வடக்கு பக்கமுள்ள ஒரு நிலத்தின் சாகுபடியாளரும் வயலின் மகசூல் எதுவும் பாதிக்கப்படவில்லை என்று வாக்குமூலம் தந்துள்ளனர். எனவே தவறான தகவலை கொடுத்திருப்பதாக உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு தகவல் தருவார்களேயானால் தவறான தகவல் கொடுத்த அதிகாரி மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தண்டராம்பட்டு தொகுதியில் போடப்பட்ட கைப்பம்புகள்.

*வினா எண் 863—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் உள்ள கிராமங்களில் 1980 ஜூலை முடிய போடப்பட்ட கைப் பம்புகள் எத்தனை?